## சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் – 2011–2012–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை – 3 அரசு கள்ளர் துவக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகவும் நிலை உயர்த்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை**

அரசாணை (நிலை) எண்.76 நாள்:14.06.2012

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.பி1/238/2011, நாள் 14.07.2011, 26.08.2011 மற்றும் 22.12.2011.

*****

ஆணை:

08.07.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது 9 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்த ஒப்புதல் வழங்கி இருந்தார். 2011–2012–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 3 அரசு கள்ளர் துவக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 3 அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் 9 அரசு கள்ளர் பள்ளிகளை நிலை உயர்த்துவதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட 9 அரசு கள்ளர் பள்ளிகளை 2012–2013–ஆம் நிதியாண்டில் நிலை உயர்த்தி ஆணையிடுகிறது.

| வ.எ | பள்ளியின் பெயர் | நிலை உயர்த்துதல் |
|---|---|---|
| 1. | அரசு கள்ளர் துவக்கப்பள்ளி வி. பெருமாள்பட்டி, மதுரை மாவட்டம் | நடுநிலைப்பள்ளியாக |
| 2. | அரசு கள்ளர் துவக்கப்பள்ளி கருவேல்நாயக்கன்பட்டி, தேனி மாவட்டம் | நடுநிலைப்பள்ளியாக |
| 3. | அரசு கள்ளர் துவக்கப்பள்ளி, பொ.மீனாட்சிபுரம், தேனி மாவட்டம் | நடுநிலைப்பள்ளியாக |

| | | |
|---|---|---|
| 4. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி கரடிக்கல், மதுரை மாவட்டம் | உயர்நிலைப்பள்ளியாக |
| 5. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி முத்துப்பட்டி, மதுரை மாவட்டம் | உயர்நிலைப்பள்ளியாக |
| 6. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி சித்தர்கள்நத்தம், திண்டுக்கல் மாவட்டம் | உயர்நிலைப்பள்ளியாக |
| 7. | அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி, மார்க்கையன் கோட்டை, தேனி மாவட்டம் | மேல்நிலைப்பள்ளியாக |
| 8. | அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி சென்னமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் | மேல்நிலைப்பள்ளியாக |
| 9. | அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி முத்தணம்பட்டி, தேனி மாவட்டம் | மேல்நிலைப்பள்ளியாக |

3. மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்டுள்ள 3 அரசு கள்ளர் துவக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்துவதன் மூலம் இப்பள்ளிகளில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 துவக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4700 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் நிலை உயர்த்தி ஆணையிடப்படுகின்றது. மேலும், நிலை உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் வீதம் 3 பள்ளிகளுக்கு முதலாமாண்டில் 3 பணியிடங்களும், அப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஒராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்தும், இரண்டாமாண்டில் 3 பணியிடங்களும், மூன்றாமாண்டில் இதர 3 பணியிடங்களும் என மொத்தம் 9 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300 – 34,800 + தர ஊதியம் ரூ.4600 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் தோற்றுவிக்கப்படுகின்றன.

4. 3 அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தும்போது, இப்பள்ளிகளில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 + தனி ஊதியம் ரூ.750 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி ஆணையிடப்படுகிறது. நிலை உயர்த்தப்பட்ட 3 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் மொத்தம் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600 என்ற ஊதிய ஏற்ற விகிதத்திலும், ஒரு பள்ளிக்கு ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் வீதம் 3 பள்ளிகளுக்கு 3 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ரூ.5200–20,200 + தர ஊதியம் ரூ.2400 என்ற ஊதிய ஏற்ற விகிதத்திலும், ஒரு பள்ளிக்கு ஒரு ஆய்வக உதவியாளர் வீதம் 3 பள்ளிகளுக்கு 3 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் ரூ.5200–20,200 + தர ஊதியம் ரூ.1900 என்ற ஊதிய ஏற்ற விகிதத்திலும் இப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஒராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்து ஆணையிடப்படுகிறது.

5. 3 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தும்போது, இப்பள்ளிகளில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.15600–39,100 + தர ஊதியம் ரூ.5700 என்ற ஊதிய

ஏற்ற விகிதத்தில் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும், ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம், 3 பள்ளிகளுக்கு 27 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ரூ.9300–34,800 + தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் இப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஒராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்தும் ஆணையிடப்படுகிறது.

6. மேலே பத்தி– 2–ல் நிலை உயர்த்தப்பட்ட 9 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு புதிய ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களை 2012–2013–ம் நிதியாண்டில் தோற்றுவிப்பதற்கு ஆண்டொன்றுக்கு செலவினமாக ரூ.1,39,42,080/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து எண்பது மட்டும்) ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80. பொது – 101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் I திட்டத்தில் சேராதது AE சீர்மரபினர் பள்ளிகள் – 01 சம்பளங்கள்” (த.தொ.கு.2225–80–101–AE–0105)

7. பள்ளிக்கல்வித்துறையில் பள்ளிகளை நிலை உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை மேலே பத்தி 2–ல் நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகள் பூர்த்தி செய்வதை உறுதி செய்து கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 2–ல் நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் 3 பாடப்பிரிவுகளை தோற்றுவித்துக் கொள்ளவும், எந்தப் பாடப்பிரிவிற்கு முன்னுரிமை அளித்து துவக்குவது என்பது குறித்து மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரை கலந்தாலோசித்து முடிவு செய்து கொள்ளுமாறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேலே பத்தி 2–ல் ஆணையிட்டுள்ளபடி பள்ளிகள் நிலை உயர்த்தப்பட்டதினால், நிலை உயர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத அனைத்து பணியாளர்களுக்கும் அவ்வப்போது அரசு வெளியிடும் ஆணைகளுக்கேற்ப சம்பளம் மற்றம் இதர படிகள் கருவூலத்திலிருந்து பெற்று வழங்கும் அதிகாரத்தை, அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு அளித்து அரசு ஆணையிடுகிறது.

10. இது ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் கிடைக்கும்வரை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கும் ஆணைகள் நிதி(வ.செ–I)துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத்தை பெறுவதற்கு உரிய படிவத்தை பூர்த்தி செய்து நிதி(வ.செ–I)துறைக் அனுப்பி பெற்று கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக்

கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை 2012–2013–ம் ஆண்டு துணை மானிய கோரிக்கையில் சேர்த்திட உரிய முன்மொழிவினை நிதி(வ.செ.பொ-I)த்துறைக்கு அனுப்புமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.9/கூ.செ.(ஏஸ்.ஜெ)/2012, நாள் 14.06.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.395 (முந்நூற்று தொண்ணூற்றைந்து)–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்
மாநில கணக்காயர், (துணிக்கை–1) சென்னை–18/(பெயரில்).
மாநில கணக்காயர், (துணிக்கை–II) சென்னை–18/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை–20.
மாவட்ட ஆட்சியர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை–20.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
கருவூல அலுவலர், தேனி மற்றும் திண்டுக்கல்
**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9,
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை–9.
நிதி(பிமிபி/வரவு–செலவு(பொது I மற்றும் II)/
மை.ம.ஆ.பி.(CMPC)துறை,சென்னை–9.
இருப்புக் கோப்பு /உபரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்